

# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சுற்றுப்பயண அறிவிப்பு

**மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அரசு மற்றும் கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்க இன்று கடலூர் மாவட்டத்திற்குச் செல்கிறார். அங்கு அவர் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளின் விவரம் வருமாறு:**

**25/11/2024 திங்கள்கிழமை**

| நேரம் | நிகழ்ச்சி | இடம் |
|---|---|---|
| காலை 10:00 மணி | 'கலைஞர் விளையாட்டு உபகரணங்கள்' வழங்குதல். | புனித வளனார் மேல்நிலைப்பள்ளி, கம்மியம்பேட்டை, கடலூர். |
| காலை 11:15 மணி | முத்தமிழறிஞர் கலைஞர் நூலகம் திறப்பு விழா. | சங்கரன் சாலை, துறைமுகம், கடலூர். |
| காலை 11:45 மணி | கழக சார்பு அணி நிர்வாகிகளுடனான சந்திப்பு. | எம்.எம்.எம்.திருமண மண்டபம், துறைமுகம், கடலூர். |
| மதியம் 01:00 மணி | மாற்றுத் திறனாளிகளுக்கு மூன்று சக்கர மோட்டார் வாகனம் வழங்குதல். | சி.கே.பள்ளி வளாகம், கடற்கரைச் சாலை, அண்ணா நகர், கடலூர். |
| மாலை 04:30 மணி | அரசு ஆய்வுக் கூட்டம் | ஆட்சியர் அலுவலகம், கடலூர். |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 21-11-2024



# மன்பதை காத்திடவே மாவீரர் உதயநிதி நீடுவாழ்க!



ஒருகவலை இனியில்லை
பெருங்கழகங் காப்பதற்கு!
ஓராயிரம் வீரர்கள்போல்
தோள்வலிமை பெற்றமகன்!
தேரோடும் திருவாரூர்
சீர்பெருமை பேசுதல்போல்
நீராடும் நங்கையர்க்கோ
நலம்பயக்கும் காவிரிபோல்
வாராத மாமணியாய்
வந்துதித்தார் எம்உதயா!

தீராத எம்கவலை
தீர்ந்ததுபார் இவர்வரவால்!
வீராதி வீரரெல்லாம்
வீழ்ந்திடுவர் போர்க்களத்தில்!
தீராத பகைநெருப்பை
மென்றிடுவார்; தின்றிடுவார்;
வென்றிடுவார் கொடும்பகையை!
திராவிடத்தை, கழகத்தைத்
தோள்தூக்கி நடத்திடுவார்!
திராவிடத்துப் புகழ்பேசும்

திண்டோளார் பெரியாரைத்
தமிழ்த்தலைவர் அண்ணாவைத்
தண்டமிழார் கலைஞரையும்
தாரணிக்கே எடுத்தோதத்
தனிப்பெருமை எழுதிடவா!
திராவிடத்துத் திருவிளக்காம்
திருக்குவளை மண்புகழார்
தளபதியார் சாதனையைப்
பார்வியக்கப் பாடிடவா
பண்பாட்டுப் பெட்டகமே!

ஒன்றியத்தின் மனஇருட்டை
அறிவாயுத ஒளிவிளக்கால்
அடலேறே விரட்டிடவா!
ஆர்ப்பரிக்கும் அலைகடலாய்

கார்முகிலாய் நடத்திடவா!
உணர்த்திடவா! உடன்பிறப்பே!
சனாதனத் தர்மத்தைத்
தகர்த்திடவா! பகுத்தறிவே!
மாவீரர் உதயநிதி
மாகழகம் காத்திடவே

எழுந்திட்டார் எழுகதிராய்!
பூநாடும் வண்டுகள்போல்
போர்ப்பரணி பாடிடத்தான்
புறப்படடா புலிப்போத்தே!
எழுந்திடடா! இளைஞரணிக்
குலக்கொழுந்தே! குணக்குன்றே!
குறித்துக்கொள்! கொள்கையரே!
நெஞ்சத்தில் பதிவுகொள்க!
நெடும்படைக்கே உறுதிசெய்வாய்!
மன்பதைப்பார் காத்திடவே

மாவீரர் மணிமார்ப!
பிறந்தநாள் விழாக்காணும்
உதயநிதி நீடுவாழ்க!



**கவிஞர் தமிழ்தாசன்**
கழகத் தீர்மானக்குழுத் தலைவர்

# துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை

முதல் பக்கத் தொடர்ச்சி

எத்தனையோ பொறுப்புகளில் இருந்தாலும் அதையெல்லாம் விட அதிகமாக எண்ணுவது எப்போதுமே உங்கள் வீட்டுப்பிள்ளையாக, பொறுப்பான பிள்ளையாக, கலைஞரின் பேரனாக இருப்பேன். அதைத்தான் நான் பெருமையாக எண்ணுவேன்.

இந்தச் சிறப்பான நேரத்தில் வாய்ப்பை அளித்த நேரு அண்ணன் அவர்களுக்கு மீண்டும் என் நன்றியைத் தெரிவித்து, நம் தலைவர் அவர்கள் ஏற்கனவே சொல்லி இருக்கிறார். வருகின்ற 2026ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் இன்னும் சரியாகப் பார்த்தீர்கள் என்றால் இன்னும் 15 மாதங்கள்தான் இருக்கின்றன, நம் கையில். நம் தேர்தல் பணிகளைப் பிரச்சாரத்தை ஆரம்பிக்க வேண்டும்.

எப்படி நாடாளுமன்றத் தேர்தலில் 100 சதவிகித வெற்றியை தமிழ்நாட்டு மக்கள் நமக்குக் கொடுத்தார்கள். நம் தலைவரின் திராவிட மாடல் ஆட்சிக்கு ஒரு சான்றிதழாக 40க்கு 40 தொகுதி வெற்றிப் பெற்றோம். அதேபோல் வர இருக்கின்ற சட்டமன்ற தேர்தலிலும், தலைவர் சொல்லி இருக்கிறார் 234 தொகுதிகளில் குறைந்தது 200 தொகுதிகளிலாவது தி.மு.க கூட்டணி, நம் வெற்றிக் கூட்டணி வெற்றிப்பெற வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்.

இரண்டு நாட்களுக்கு முன்புகூட அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொருளாளர் திண்டுக்கல் சீனிவாசன் பொதுக்கூட்டத்திலேயே பேசுகிறார். `அ.தி.மு.க கூட்டணிக்கு வாருங்கள்' என்றால் `ஒருத்தன் 100 கோடி கேட்கிறான், ஒருவன் 20 தொகுதி கேட்கிறான்' என்கிறார். இந்த மாதிரி ஒரு கேவலமான, அவலமான நிலை எந்தக் கட்சிக்காவது வந்து இருக்கிறதா? ஆனால், நம் வெற்றிக்கூட்டணி, திராவிட முன்னேற் றக் கழகம் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கடந்த 7 தேர்தல்களில் தொடர் வெற்றியைப்பெற்று வருகிறது.

**100 சதவிகித வெற்றி!**

நம் தலைவர் எப்போது தி.மு.கழகத்தின் தலைவராகப் பொறுப்பேற்றாரோ அதன்பிறகு சந்தித்த அனைத்து தேர்தல்களிலும் 100 சதவிகித வெற்றியை பெற்று இருக்கிறது, நம் திராவிட முன்னேற்றக் கழகம். எனவே, வருகின்ற சட்டமன்ற தேர்தலும் நமக்கு மிகமிக முக்கியம். தலைவர் சொன்னதை போல் குறைந்தது 200 தொகுதிகள் வெற்றிபெற வேண்டும் என்றால், தொடர்ந்து இன்றிலிருந்து கழகத் திட்டங்களின் பிரச்சாரத்தை உடன்பிறப்புகள் நீங்கள் ஒவ்வொருவரும் மக்களிடம் எடுத்துக்கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும்.

தேர்தலில் வெற்றி பெற்று 2026ஆம் ஆண்டு மீண்டும் ஆட்சியமைக்கப் போவது திராவிட முன்னேற்றக் கழகம்தான், முதலமைச்சர் நம் தலைவர் அவர்கள்தான் என்ற உறுதிமொழியை இன்று கலைஞரின் சிலை முன்பு, பேரறிஞர் அண்ணாவின் சிலை முன்பு நாம் அத்தனைபேரும் உறுதி எடுத்துக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து, உங்கள் அனைவருக்கும் மீண்டும் 2026ஆம் ஆண்டுத் தேர்தலை ஞாபகபடுத்திப் பிரச்சாரத்தை இன்றிலிருந்து ஆரம்பியுங்கள்.

இவ்வாறு அவர் பேசினார்.

இந்நிகழ்வில் அமைச்சர்கள் கே.என்.நேரு, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, எஸ்.ரகுபதி, எஸ்.எஸ்.சிவசங்கர், கோவி.செழியன், சிவ.வீ.மெய்யநாதன், மாவட்டக்கழகச் செயலாளர்கள் காடுவெட்டி தியாகராஜன், வைரமணி, செல்லபாண்டியன், பெரம்பலூர் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் ஜெகதீசன், நாடாளுமன்ற உறுப்பினர் அருண் நேரு, திருச்சி மேற்கு மாநகரச் செயலாளர், மேயர் அன்பழகன், சட்டமன்ற உறுப்பினர்கள் சௌந்தரபாண்டியன், ஸ்டாலின்குமார், கதிரவன், பழனியாண்டி, பிரபாகரன், குளித்தலை மாணிக்கம், அப்துல் வகாப், அன்னியூர் சிவா, மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் தர்மன் இராஜேந்திரன், மாவட்ட அவைத்தலைவர் அம்பிகாபதி, மாவட்டத் துணைச் செயலாளர்கள் மதிவாணன், பானுமதி கண்ணன், கனகராஜ், செயற்குழு உறுப்பினர்கள் தமிழ்மாறன், கருணை ராஜா, கழக இளைஞர் அணி மாநிலத் துணைச் செயலாளர் ஆனந்த்குமார், மாநில நெசவாளர் அணி துணைச் செயலாளர் கோவிந்தன், துறையூர் நகரக் கழகச் செயலாளர் முரளி, ஒன்றியக் கழகச் செயலாளர் அண்ணாதுரை, சரவணன், வீரபுத்திரன், முத்துசெல்வம், அசோக், பேரூர் கழகச் செயலாளர்கள் வெள்ளையன், நடராஜன், திருச்சி மத்திய மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆனந்த், வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கார்த்திக், வடக்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் சிலம்பரசன், முத்துத்துரை, கலையரசன், மருதுசேகர், ராஜேஷ், சிவ நடராஜன் மற்றும் கழக முன்னணி/யினர் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.



தேனி வடக்கு மாவட்டம் போடி நகர பகுதியில் வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. வழிகாட்டலின் படி வாக்காளர் சேர்த்தல் நீக்கல் சிறப்பு முகாமை நகரச் செயலாளர் ஆர் புருசோத்தமன், போடி நகரப் பகுதி பார்வையாளர் மாவட்ட துணை செயலாளர் செந்தில் முருகன் ஆகியோர் பார்வையிட்டனர்.

# அமைச்சர் ஆர். காந்தி காட்டமான பதில்!

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

எனவே, நெசவாளர்களுக்கு எந்த திட்டத்தின் கீழும் இவ்வரசால் வீடுகள் கட்டித் தரப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது உண்மைக்கு புறம்பானதாகும்.

**தள்ளுபடி மானியம்!**

இக்கழக ஆட்சியின் போது தான், 1998 ஆம் ஆண்டு முதல் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் ஆண்டு முழுவதும் கைத்தறித் துணி விற்பனையில் 20 விழுக்காடு தள்ளுபடி வழங்கவும், 2001 ஆம் ஆண்டு முதல் பேரறிஞர் அண்ணாவின் பிறந்தநாளை நினைவு கூரும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 15 முதல் ஜனவரி 31 வரை 139 நாட்களுக்கு கூடுதலாக 10 விழுக்காடு சேர்த்து 30 விழுக்காடு தள்ளுபடி மானியம் வழங்கவும் ஆணையிடப்பட்டது.

அ.தி.மு.க ஆட்சியில் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படாமல் விட்டுச் சென்ற நிலுவைத் தொகை ரூ.160 கோடியினை, இக்கழக அரசு 2021 ஆம் ஆண்டில் முழுவதுமாக விடுவித்துள்ளது.

இவ்வரசு 2021-2022 முதல் 2024-2025 ஆம் ஆண்டு 31.10.2024 முடிய ரூ.794.25 கோடி கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ்-க்கு விடுவித்துள்ளது என்பது இவ்வரசின் சாதனையாகும்.

**கூலி உயர்வு!**

கைத்தறி துறையின் கட்டுப்பாட்டில் உள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினராக உள்ள கைத்தறி நெசவாளர்களை ஊக்குவிக்கவும் அவர்களது வருவாயை அதிகரித்து வாழ்வாதாரத்தினை மேம்படுத்தவும், அவ்வப்போது உயர்ந்து வரும் சந்தை நிலவரத்தினை கருத்தில் கொண்டும் கூட்டுறவு சங்கங்களில் கைத்தறி நெசவு தொழில் ஈடுபடும் கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்படும் கூலியில் அவ்வப்போது அடிப்படைக்கூலி மற்றும் அகவிலைப்படியில் 10 விழுக்காடு உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. இவ்வரசு பொறுப்பேற்றவுடன் ஆண்டுதோறும், கீழ்க்கண்டவாறு கூலி உயர்வு தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

**கூலி உயர்வு வழங்கப்பட்ட நாள் அடிப்படை/ அகவிலைப்படி கூலி உயர்வு சதவிகிதம்!**

01.01.2022 அடிப்படைக் கூலியில் (Basic Wages) 10% உயர்வு மற்றும் அகவிலைப்பயில் (DA) 10% உயர்வு

01.05.2023 அடிப்படைக் கூலியில் (Basic Wages) 10% உயர்வு

01.08.2024 அகவிலைப்படியில் (DA) 10% உயர்வு.

மேலும், 2024-2025 ஆம் ஆண்டுக்கு நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கான கோ-ஆப்டெக்ஸ் உற்பத்தி திட்டத்தின்கீழ் ரூ.90 கோடி அளவிற்கு உற்பத்தி திட்டம் வழங்கப்பட்டுள்ளது. எனவே, கோ-ஆப்டெக்ஸ் ஆர்டரே தருவதில்லை என்பது உண்மைக்கு புறம்பானதாகும்.

**கைத்தறித் துறை சார்ந்த தேர்தல் வாக்குறுதிகளின் நிறைவேற்றம்!**

தேர்தல் அறிக்கை 2021-இல் கைத்தறித் துறைக்காக அளிக்கப்பட்ட மொத்தம் 13 வாக்குறுதிகளில் 12 வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டு இவ்வரசு பொறுப்பேற்ற மூன்றாண்டுகளில் சுமார் 90% தேர்தல் வாக்குறுதிகள் சிறப்பாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

**கைத்தறி நெசவாளர்களுக்கு அரசின் இதர முன்னெடுப்பு நடவடிக்கைகள்!**

மேற்கண்ட நலத்திட்டங்களைத் தவிர கைத்தறி தொழிலை பாதுகாக்கவும், கைத்தறி தொழிலில் ஈடுபட்டுள்ள நெசவாளர்களின் நலனை மேம்படுத்தும் பொருட்டு, தமிழ்நாடு அரசால் கீழ்கண்ட பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

I.தொடக்க நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளில் பெறும் நடைமுறை மூலதன கடன் தொகைக்கான வட்டியில் 6 சதவீதம் வட்டி மானியம் (Interest Subsidy) சங்கங்களுக்கு மாதந்தோறும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்காக அரசு ரூ.14.73 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.

II.கைத்தறி ஆதரவுத் திட்டத்தின் கீழ் இது வரை கைத்தறி நெசவாளர்களுக்கு ரூ.29.04 கோடி மதிப்பில் 30,227 தறிகள் மற்றும் தறி உபகரணங்களும், (Looms and Accessories) மற்றும் 434 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு ரூ.30 கோடி நிதியுதவியும் வழங்கப்பட்டுள்ளது.

III.10 சிறிய அளவிலான கைத்தறி பூங்காக்கள் (Mini Handloom parks) அமைக்க அரசால் திட்டமிடப்பட்டு, தற்போது காஞ்சிபுரம் மற்றும் திண்டுக்கல் ஆகிய 2 இரண்டு இடங்களில் கைத்தறி பூங்காக்கள் திறந்து வைக்கப்பட்டு உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

IV.ஆரணி பகுதியில் 5000 பட்டு நெசவாளர் பயன் பெறும் வகையில் 20.53 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.44 கோடி செலவில் டாக்டர் கலைஞர் கருணாநிதி நூற்றாண்டு நினைவு கைத்தறி பட்டுப் பூங்கா (Handloom Silk Park) நிறுவப்படவுள்ளது.

V.நெசவாளர் முத்ரா கடன் திட்டத்தின்கீழ் (Weavers Mudra Scheme) கடந்த 3 ஆண்டுகளில், 37455 கைத்தறி நெசவாளர்களுக்கு ரூ.191.67 கோடி, வங்கிகள் மூலம் குறைந்த வட்டியில் கடன் வழங்கப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே, தமிழ்நாடு தொடர்ந்து முதன்மை மாநிலமாக செயல்படுத்தி வருகிறது.

VI.கைத்தறி நெசவாளர்களுக்கு மாதாந்திர முதியோர் ஓய்வூதியத் தொகை மற்றும் குடும்ப ஓய்வூதியத் தொகை ரூ.1000/- லிருந்து ரூ.1200/- ஆக 01.08.2023 முதல் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

VII.நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டத்தின் கீழ், கைத்தறி நெசவாளர்கள் சேமிப்புத் தொகை முழுவதையும் பெறுவதற்கான கால அளவினை 25 ஆண்டுகளிலிருந்து 20 ஆண்டுகளாக 05.07.2023 முதல் குறைக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான இவ்வரசு பொறுப்பேற்றது முதல், வேறு எந்த அரசை விடவும், நெசவாளர்கள் நலன் மற்றும் பாதுகாப்பில் அதிகபட்ச அக்கறை செலுத்தி, பல்வேறு வளர்ச்சி மற்றும் நலத்திட்டங்களை செவ்வனே செயல்படுத்தி வரும் நிலையில், இவற்றை ஏதும் அறியாத சட்டமன்ற எதிர்கட்சித் தலைவர், அவரின் பல்வேறு தேதியிட்ட கைத்தறி துறை தொடர்பான அறிக்கைகளுக்கு நான் தக்க பதிலடி கொடுத்திருந்தும், அதையெல்லாம் கவனத்தில் கொள்ளாமல், வாய்க்கு வந்தவாறு செவிவழிச் செய்திகளைக் கேட்டு, உரிய தரவுகள் ஏதுமின்றி, உண்மைக்கு புறம்பான கருத்துகளை சுய இலாபம் மற்றும் அரசியல் ஆதாயத்திற்காக, தரம் தாழ்ந்த அரசியலில், கண்ணியமற்ற முறையில், மலிவாக ஈடுபடுவதை நான் வன்மையாக கண்டிப்பதுடன், அவர் இம்மாதிரியான நடவடிக்கைகளை இனிமேலாவது கைவிட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் ஆர்.காந்தி தமது பதிலில் கூறியுள்ளார்.